Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 07 2025

புதன்கிழமை 09, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 279 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

இணைய சேவைகளுக்கு

## 18% VAT

பல்வேறு சேவைகளை ஒன்லைனில் வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்திற்கான 18 சதவீத பெறுமதி சேர் வரி (VAT) 2025 அக்டோபர் 01 முதல் அமுல்படுத்தப்படும்.

அதன்படி, உள்நாட்டு வருவாய் துறை, இந்த வரி ஒக்டோபர் 01 முதல் இலங்கையில் ஒருவருக்கு மின்னணு தளம் மூலம் ஒரு வெளிநாட்டு நபர் வழங்கும் சேவைகளுக்கு பொருந்தும் என்று அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



காணாமல் போன்றவர்களின்

# எலும்புக்கூடுகள் செம்மணியிலா?

செம்மணி மனிதப் புதை குழிக்கு யார் காரணம் என்பதனை இந்த அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். இல்லாது விட்டால் மீண்டும் ஒரு கலவரம் ஏற்பட்டு விடும் என்ற சந்தேகம் எமக்குள்ளது. ஏனெனில், காணாமல் போன்றவர்கள்தான் இவ்வாறு எலும்புக்கூடுகளாக மீட்கப்படுகின்றார்கள் என்று கூறப்படுகின்றது என மலையக மக்கள் முன்னையின் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்பா ராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) அன்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இன்று மக்களினாலும் வெளிநாடுகளினாலும் அதிகமாக பேசப்படும் விடயம் செம்மணி மனிதப்புதைகுழி.இது இந்த நாட்டுக்கு மட்டுமல்ல சர்வதேசத்திற்கும் பெரிய பிரச்சினையாகவுள்ளது. ஆனால் உள்ளூரில் அதைப்பற்றி யாரும் அலட்டிக்கொள்வதில்லை. கடந்த அரசாங்கம் செய்துள்ளது. நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கூறப்படுகின்றது. அப்படி சொல்ல முடியாது. இந்த அரசாங்கமும் இதற்கு பொறுப்புக்கு கூற வேண்டும். இந்தத் அரசாங்கமாக இருந்தாலு பொறுப்புகூறத்தான் வேண்டும்.

ஆகவே இந்த அரசு இந்த செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் இந்த மனிதப்புதைகுழியிலிருந்து 42க்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஏதோவொரு கருவியும் கிடைத்ததாக சொல்லப்படுகின்றது. ஆகவே இதற்கெல்லாம் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். தட்டிக்கழிக்க முடியாது. அந்த மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்குள்ளது. யார் இதனை செய்தார்கள் என்பதனை உறுதி செய்ய வேண்டும். அவர்கள் சுயமாக சிந்திப்பதற்கு, செயற்படுவதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இல்லாது விட்டால் மீண்டு ஒரு கலவரம் உண்டாகுமா என்ற சந்தேகமும் எமக்குள்ளது. எனவே, அவ்வாறனதொரு சூழ் நிலையை மீண்டும் உருவாக்கி விடாதீர்கள். ஏனெனில், காணாமல் போன்றவர்கள்தான் இவ்வாறு எலும்புக்கூடுகளாக மீட்கப்படுகின்றார்கள் என்ற சந்தேகமும் உள்ளது என்றார்.

## இனிய பாரதியின் சாரதியும் கைது

கனகராசா சரவணன்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் முன்னாள் வாகன சாரதியான தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த செழியன் என்று அழைக்கப்படும் அழகரட்ணம் யுவராஜ் என்பவர் கல்முனை நகரில் வைத்து சி.ஐ.டியினர் திங்கட்கிழமை(7) கைது செய்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அப்துல் வாசித் எம்.பியானார்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மொஹமட் சரிபு அப்துல் வாசித், பத்தாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (08) அன்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் சாலி நளீம் பதவிவிலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு எம்.எஸ்.அப்துல் வாசித் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.



கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின்

## "வகிபாகம் முன்மாதிரியானது"

பின்தங்கியுள்ள சமூகத்தில் மீண்டும் மனிதாபிமானத்தின் உயிரோட்டத்தையும் ஆன்மீகப் பண்புகளையும் கொண்டு வருவதில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் வகிபாகம் முன்மாதிரியானது என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு உயர் மறை மாவட்ட ஆயர், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணிவாழ்வின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பேராயர் இல்லத்தில் திங்கட்கிழமை (07) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## மாணவி உயிரிழப்பு



கொழும்பு மகரகம தேசிய வைத்தியசாலையில், இரத்தப்புற்று நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி, திங்கட்கிழமை (07) மாலை 5.00 மணியளவில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

கரணவாய் மூத்த விநாயகர் கோவில் பகுதியைச் சேர்ந்த சுகந்தன் பூமிகா வயது 19 என்ற என்ற உயர்தர பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

## ரம்புட்டான் விதை சிக்கி குழந்தை மரணம்



வீட்டில் ரம்புட்டான் பழத்தை ருசித்துக்கொண்டிருந்த ஐந்து வயது குழந்தை, ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி உயிரிழந்ததாக மித்தேனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## லலித், குகன் விசாரணை மீண்டும் ஆரம்பம்



அரசியல் செயற்பாட்டாளர்களான லலித், குகன் உட்பட, யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நஜித் இந்திக எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

## பிரபாகரனை விட செவ்வந்தி என்னா?

பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடித்த இந்த நாட்டில் நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டை சுற்றி கடல் இருக்கும் நிலைமையில் உப்பை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் கதைக்கின்றோம். இது வெட்கமானது.

தொடர்ச்சி P2

## "அமெரிக்க வரியை புரிந்து கொள்ளுங்கள்"

அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர தீர்வை வரி இலங்கைக்கு மாத்திரம் விதிக்கப்படவில்லை. அனைத்து நாடுகளுக்குமே விதிக்கப்பட்டுள்ளன என்பதை எதிர்க்கட்சிகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் இந்த பரஸ்பர .தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடன் வெகு விரைவில் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். சாதகமான தீர்வு இலங்கைக்குக் கிடைக்கும் என பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

பௌதீக சோதனை இல்லாமல்

# “2,218 கொள்கலன்கள் விடுவித்தது ஏன்?



13 சந்தர்ப்பங்களில், 2,218 கொள்கலன்கள் பௌதீக சோதனை இல்லாமல் விடுவிக்கப்பட்டன. இதில் 999 சிவப்பு என வகைப்படுத்தப்பட்ட கொள்கலன்களும், மஞ்சள் நிறம் என வகைப்படுத்தப்பட்ட 1,219 கொள்கலன்களும் இதில் அடங்கும். இது தொடர்பாக அரசாங்கத்தின் பதில் என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (08) அன்று நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி எழுப்பியபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், இறக்குமதி செய்யப்பட்ட 323 கொள்கலன்கள் சுங்க பரிசோதனைகள் இல்லாது விடுவிக்கப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளின் கீழ், பரிந்துரை 4இன் 3ஆவது பந்தி இவ்வாறு குறிப்பிடுகிறது: இவ்வாறு நல்லெண்ணத்துடன் கொள்கலன் நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால், இந்த நடைமுறை குறித்து முறையாக சுங்கத் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவித்து, சுங்கப் பகுதியிலிருந்து வெளியேறிய பின்னர் அது குறித்து ஏனைய சுங்க விசாரணைப் பிரிவுகள் மூலம் சோதனைக்கு உட்படுத்தி ‘சிவப்பு’ என வகைப்படுத்தப்பட்ட கொள்கலன்களைப் பௌதீக ரீதியான பரிசோதனை செய்யாததன் ஊடாக ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைத்துக்கொள்ள முடிந்திருக்கும். இந்த பரிந்துரையின் மூலம், முழு செயல்முறையும் நல்லெண்ணமின்றியே மேற்கொள்ளப்பட்டது என்பதைக் குறிக்கிறது. இதன் பிரகாரம், நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன்.

12.06.2025 அன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட 323 சந்தேகத்திற்குரிய இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்கள் குறித்த விசாரணை அறிக்கை இன்னும் பகிரங்கப்படுத்தப்படாததற்கான காரணங்கள் யாது? இந்த அறிக்கையை முழுமையாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்ய அரசாங்கம் எப்போது நடவடிக்கை எடுக்கும்?

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வெளிக்கொணர்ந்தார். ஆனால், அரசாங்கமே இதைச் செய்திருக்க வேண்டும் என்றார்.

# 18% VAT

இந்த வரிக்கான பதிவு, கட்டணம் மற்றும் இணக்கத்திற்கான நடைமுறை உள்நாட்டு வருவாய் ஆணையர் ஜெனரலால் குறிப்பிடப்படும், மேலும் ‘மின்னணு தளம், நிரந்தர ஸ்தாபனம் மற்றும் வெளிநாட்டு நபர்’ என்ற சொற்கள் கூடுதல் வரிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன என்று உள்நாட்டு வருவாய் துறை தெரிவித்துள்ளது.

தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பை ஜூலை 01 அன்று உள்நாட்டு வருவாய் ஆணையர் ஜெனரல் வெளியிட்டார்.

# ரம்புட்டான் விதை சிக்கி...

இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் மித்தேனிய, பல்லே, ஜூலம்பிட்டிய பகுதியில் திங்கட்கிழமை (07) பதிவாகியுள்ளது.

வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட பல ரம்புட்டான்களை ருசித்துக்கொண்டிருந்த குழந்தையின் தொண்டையில் ரம்புட்டான் விதை சிக்கியதை அறிந்த குடும்பத்தினர் உடனடியாக குழந்தையை வலஸ் முல்ல ஆரம்ப மருத்துவமனைக்கு கொண்டுச் சென்றனர், ஆனால் அந்த குழந்தை ஏற்கெனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர், மூன்று குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் இளையவராவார். இறந்த குழந்தையின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக தங்காலை அடிப்படை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குழந்தையின் இழப்பைத் தாங்க முடியாத தாயும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் மேலும் கூறினார்.

# “வகிபாகம் முன்மாதிரியானது”



சமூகத்தின் நல்வாழ்வு மற்றும் ஆன்மீகத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள அன்னார், பாரிய சேவையாற்றும் ஒரு ராஜதந்திரி, பைபிளை மிக நன்றாக விளக்கி விடயங்களை முன்வைக்கக்கூடிய ஒரு வேத விற்பன்னர், சமூகத்தை எழுச்சியூட்டும் வலுவான ஆளுமை கொண்ட ஒரு பேச்சாளர் போன்ற பாத்திரங்களுக்கு அப்பால் உண்மையான மனித நேயர் என்றும் ஜனாதிபதி கூறினார்.

கால ஓட்டத்தில் மூடிமறைக்க இடமளிக்காது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார். இது அரசாங்கம் மற்றும் அரசாங்கத்திற்குள் இருந்து ஆராயப்பட வேண்டிய ஒரு சவால் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் இந்த விடயத்தில் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தனது 50 வருடகால அனுபவத்தை இதன்போது, நினைவு கூர்ந்த கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, 75 ஆண்டுகால சர்வாதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதியினால் முடிந்திருப்பது குறித்து பாராட்டுத் தெரிவித்தார்.அத்தோடு நாட்டில் பல்வேறு இனக்குழுக்களிடையே வெறுப்பை விதைக்கும் அரசியல் கலாசாரத்தை வேரோடு ஒழிக்க முடிந்திருப்பது குறித்தும் அன்னார் தனது நன்றியைத் தெரிவித்ததுடன், நாட்டை ஒரு வளமான தேசத்தை நோக்கி இட்டுச் செல்வதில் ஒரு புதிய அணுகுமுறையின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

கொழும்பு உயர் மறை மாவட்ட ஆயர் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவ வாழ்க்கையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறை என்பன இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டு குருநாகல் பொல்கஹவெலயில் பிறந்த மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி பரிசுத்தப் பாப்பரசர் ஆறாம் பவுலினால் வத்திக்கானில் உள்ள புனித பீட்டர் பெசிலிக்கா பேராலயத்தில் குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டார். அதைத் தொடர்ந்து, 1978 முதல், அவர் பங்கு உதவித் தந்தையாகவும், பதில் பங்குத் தந்தையாகவும், இறையியலில் கலாநிதியாகவும் பணியாற்றியுள்ளதுடன், அவர் இறையியல் ஸ்தாபனங்களில் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, ஸ்பானிஷ் மற்றும் இந்தோனேசிய மொழிகள் உட்பட பல மொழிகளில் புலமை பெற்றவர்.

1991ஆம் ஆண்டு, அப்போதைய பேராயர் நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோவின் தலைமையில், தேவத்தை லங்கா அன்னையின் பசிலிக்காவில், கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து, மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, 2009 ஜூன் 16 ஆம் திகதி, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயராக நியமிக்கப்பட்டதுடன், ஒரு வருடம் கழித்து, 2010 நவம்பர் 20ஆம் திகதி, இத்தாலியில் உள்ள செயிண்ட் லாரன்ஸ் பசிலிக்காவில் கர்தினாலாக நியமிக்கப்பட்டார். அதன்படி, கர்தினால் பதவியைப் பெற்ற இரண்டாவது இலங்கை அருட்தந்தை மாண்புமிகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆவார். அவர் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஏராளமான பதவிகளை வகித்துள்ளதுடன், சர்வதேச கூட்டங்கள் பலவற்றுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள அன்னார், அமெரிக்காவில் உள்ள தோமஸ் அக்வைனாஸ் கல்லூரியில் மத விவகாரக் கல்விக்கான தோமஸ் அக்வைனாஸ் பதக்கம் மற்றும் 2008ஆம் ஆண்டு கலாசாரத் துறையில் சாதனைகளுக்காக இத்தாலியக் குடியரசின் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட 7ஆவது Giuseppe Sciacca சர்வதேச விருதையும் பெற்றுள்ளார்.

ஒரு எழுத்தாளரான அவர் சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளுக்கு ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இந்த நிகழ்வில், மல்வத்து தரப்பின் அனுநாயக்க வண, நியங்கொட விஜிதசிறி தேரர் மற்றும் கலாநிதி வண, ஓமல்பே சோபித நாயக்க தேரர் ஆகியோர் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# “அமெரிக்க வரியை...

இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவின் வர்த்தக பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இந்த பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்காவுடன் இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை இலங்கைக்கு சாதகமானதாக அமையும் என்றார். தீர்வை வரி திருத்தம் தொடர்பில் அமெரிக்கா 14 நாடுகளின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த நாடுகளுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி வரை மாத்திரமே நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகள் அமெரிக்காவுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடவில்லை.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரி கொள்கைகளே தற்போது அமுல்படுத்தப்படுகின்றன. புதிதாக எவ்வித வரிகளும் தற்போது அமுல்படுத்தப்படவில்லை. மக்களைத் தவறாக வழிநடத்தும் கருத்துக்களைக் குறிப்பிடுவதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# பிரபாகரனை விட...

பால், தேங்காய்பால், அரசி என்பனவற்றை கொண்டு வருவதுடன், இப்போது உப்பை கொண்டு வருவது தொடர்பிலும் பேச வேண்டிய நிலைமை உள்ளது.

இதேவேளை இப்போது தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதனையும் கூற முடியாத நிலைமையே உள்ளது. முதலில் மக்களின் பாதுகாப்பு அவசியமானது. அந்தப் பாதுகாப்பு இல்லாமலே உள்ளது. நீதிமன்றத்திற்குள் துப்பாக்கி சூட்டை நடத்திய இஷாரா செவ்வந்தி என்ற பெண் இன்னும் நாட்டுக்குள்ளேயே இருப்பதாக அண்மையில் ஊடக நிகழ்ச்சியொன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். அப்படியென்றால் அந்தப் பெண்ணை ஏன் கைது செய்ய முடியவில்லை.

இதுவொரு சிறிய நாடே, பொலிஸ்மா அதிபரையே பிடிக்க முடியுமென்றால், பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியுமென்றால் ஏன் இசாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியவில்லை. முடிந்தால் ஒரு மாத காலத்திற்குள் அவரை பிடித்துக்காட்டுங்கள் என்று கோருகின்றோம். அந்த சம்பவத்தில் 12 பேரை கைது செய்துள்ளதாக கூறினாலும் அதன் பிரதான சூத்திரதாரியை பிடிக்க முடியவில்லை.

இப்போது பொதுமக்களின் பாதுகாப்பு டுபாயில் இருந்தே செயற்படுத்தப்படுகின்றது. அங்கிருந்து தொலைபேசி மூலம் கொலைகளை நடத்துகின்றனர் என்றார்.

# லலித், குகன் விசாரணை மீண்டும் ஆரம்பம்

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் கேள்விகளை முன்வைத்த நஜித் இந்திக, தற்போதைய ஜனாதிபதியின் நியமனத்தை அடுத்து ஏழு குற்றச் செயல்கள் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டதை ஜனாதிபதி அறிவித்தார்

என்பதை அறிவீர்களா என்றும், 2011ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் காணாமலாக்கப்பட்ட லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகாநந்தன் ஆகிய இரண்டு அரசியல் செயற்பாட்டாளர்களின் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் இன்றளவிலான முன்னேற்றம் யாது? என்றும்,

இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல் நிலை முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற ஆயினும் இற்றைவரையில் தீர்க்கப்படாத ஏதேனுமொரு காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணைகள் இன்றளவில் நிறைவடைந்துள்ளதா? என்றும் மற்றும் மேற்படி காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் தாமதமாக்கப்பட்டமைக்கு அரசியல் தலையீடுகள் காரணமாக அமைந்துள்ளனவா? என்றும் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கூறுகையில்,

2011 டிசெம்பர் 9ஆம் திகதி இடம்பெற்ற லலித் குமார், குகன் முருகானந்தம் காணாமல் போன சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் 2011 டிசெம்பர் 1ஆம் திகதி விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் 17 சந்தர்ப்பங்களில் அச்சுவேலி பொலிஸ் நிலையய பொறுப்பதிகாரி மேலதிக அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார்.

எனினும், இறுதியாக 2014 ஒக்டோபர் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது நிறுத்துவதற்கு நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் இல்லாமையினால் பதில் பொலிஸ்மா அதிபரால் 2025 ஜுன் 3ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு இது தொடர்பான தேவையான உத்தரவுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, குற்றவியல் விசாரணை மற்றும் நிதி விசாரணை பிரிவின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரால் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்து இந்த விசாரணைகள் தொடர்பில் சகல ஆவணங்களையும் முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆவணங்களை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த திணைக்களத்தால் மனித கொலை மற்றும் திட்டமிட்ட குற்ற விசாரணை பிரிவினால் தற்போது விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற நான்கு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினாலும், 6 சம்பவங்கள் தொடர்பில் கொழும்பு குற்றவியல் பிரிவினாலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதுடன், இந்த காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றார்.

# ”15 வயதான சிறுவர்களுக்கு எய்ட்ஸ்”

சில சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதாகவோ அல்லது மேலதிக கல்வி வகுப்புகளுக்குச் செல்வதாகவோ கூறி காட்டுக்குச் செல்கிறார்கள். இந்த சிறுவர்கள் நோய்கள் உருவாகின்றன.

சுமார் 15 சிறுவர்கள் ஏரிக்கு சமீபத்தில் காலையில் சென்றனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, நாங்கள் ஒரு தனி பொலிஸாரை நியமித்துள்ளோம். மஹியங்கனை பகுதியில் 15 வயது சிறுவர்களில் ஒன்றுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது சமீபத்தில் தெரியவந்தது. நீங்கள் 16 வயதுக்குட்பட்டவராக இருந்தால், நீங்கள் விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி வேறு ஒருவருடன் செல்ல முடியாது. போதனா மருத்துவமனையில், செவ்வாய்க்கிழமை (08) அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றும் போதே உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் ஜி.டபிள்யூ.பி.எஸ். பாலிபன மேற்கண்டவாறு தெரிவித்தார். உலக தோல் சுகாதார தினத்தை முன்னிட்டு மருத்துவமனை ஊழியர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக ஊவா மருத்துவ சங்கம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அங்கு அவர் தொடந்து உரையாற்றுகையில், மஹியங்கனையில், இன்று நாம் காணும் சிறுவர் நாளை நாம் காணும் சிறுவர் அல்ல என்பதைக் காண்கிறோம். பெண்கள் வெண்மையாக மாறி, கற்பனை செய்ய முடியாத வெண்மை நிறத்தைக் கொண்டுள்ளனர். மஹியங்கனையாவில் இதற்கு முன்பு இதுபோன்ற குழந்தைகள் யாரும் இல்லை. அவர்கள் அழகு நிலையத்திற்குச் சென்று தங்கள் இயற்கை அழகை இழக்கிறார்கள். மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் மருந்தகங்களிலிருந்து அழகுசாதனப் பொருட்கள் விருப்பப்படி வெளியிடப்படுகின்றன.

# இனிய பாரதியின் சாரதியும் கைது

கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டி பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அம்பாறை மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றிய இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார அவரது சகா தவசீலன் ஆகியோரை ஞாயிற்றுக்கிழமை (6) சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டனர் இந்த நிலையில், இனிய பாரதியின் முன்னாள் சாரதியான திருக்கோயில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் முதலாம் பிரிவைச் சேர்ந்த தனியார் பஸ் வண்டி சாரதியாக கடமையாற்றி வரும் செழியன் என்றழைக்கப்படும் அழகரட்ணம் யுவராஜ் என்பவர் சம்பவதினமான திங்கட்கிழமை (07) கல்முனை பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

பொத்துவில் இருந்து மட்டக்களப்பு நோக்கி போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் வண்டியைச் செலுத்திச் சென்ற நிலையில் கல்முனை பஸ் தரிப்பு நிலையத்தில் காத்திருந்த சிஐடி யினர் கல்முனை நகர் பஸ் தரிப்பு நிலையத்துக்கு பஸ் வண்டி வந்த நிலையில் அவரை கைது செய்தனர்

இதில் கைது செய்யப்பட்டவரை திருக்கோயில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.



## ஆனையிறவில் பாரிய விபத்து

கிளிநொச்சி, ஆனையிறவு பகுதியில் திங்கட்கிழமை(07) அன்று மாலை டிப்பரொன்றுடன் வேன் மோதி பாரியளவான விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பருடன் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வேன் நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வேனில் பயணித்த பயணிகள் எந்த வித உயிர் சேதங்களும் இன்றி பலத்த காயங்களுடன் உயிர் தப்பிய நிலையில் சிகிச்சைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் பிரதேச சபை அதிரடி அறிவிப்பு

■ நிதர்ஷன் வினோத்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் அனைத்து விடுதிகள், தனியார் மாணவர் விடுதிகள், வீடுகளில் அறை கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளும் வீட்டின் உரிமையாளர்கள் மற்றும் வீடுகளை நாளாந்த வாராந்த மாதாந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குபவர்கள் அனைவரும் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை நல்லூர் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம், கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவங்களினை பூரணப்படுத்தி எதிர்வரும் புதன்கிழமை (30) மாலை 4 மணிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும் என அவரின் அறிவிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேச சபையின் இந்த பகிரங்க அறிவித்தலினை உதாசீனம் செய்து தங்களுடைய விடுதிகளை நல்லூர் பிரதேச சபையில் குறித்த காலப்பகுதிக்குள் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.




### கொள்கலன்கள் விடுவிப்பில்

## "அரசியல் தலையீடு இல்லை"



323 கொள்கலன்கள் விடுவிப்பில் எந்த அரசியல் தலையீடும் கிடையாது என மீண்டும் மறுத்துள்ள அரசாங்கம் ,சமூக வலைத்தளங்களில் பரிமாற்றப்படும் அறிக்கையையே எதிர்க்கட்சி உறுப்பினர் சபைக்கு சமர்ப்பித்தார்.ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை வெகுவிரைவில் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் அறிவித்தது.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(08) அன்று 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்கு பொருளாதார அபிவிருத்தி திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தில் இருந்து கொள்கலன்களை விடுவிக்கும் போது ஏற்பட்ட நெரிசலுக்கு தீர்வு காண்பதற்கு சுங்கத் திணைக்களத்துக்கு தேவையான வசதிகள் நிதியமைச்சினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. சுயாதீனமான முறையில் தீர்மானங்கள் எடுப்பதற்கு முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டது. இவ்வாறான பின்னணியில் பரிசோதனைகள் ஏதுமின்றி சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டுகின்றனர்.

இவ்விடயத்தின் உண்மையை ஆராய்வதற்கு 2025.01.30ஆம் திகதியன்று ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய நிதியமைச்சின் செயலாளர் ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமித்தார்.

அரசியல் தலையீட்டுடன் இந்த 323 கொள்கலன்கள் பரிசோதனையின்றி, விடுவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. இந்த கொள்கலன்கள் விடுவிப்பில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றிருக்குமானால் அதற்குரிய நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுப்போம்.

ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் பரிமாற்றப்படும் அறிக்கையின் பிரதியையே எதிர்க்கட்சியின் உறுப்பினர் சபைக்கு சமர்ப்பித்தார். ஆனால் நாங்கள் ஜனாதிபதிக்கு கையளித்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு வெகுவிரைவில் சமர்ப்பிப்போம் என்றார்.

## சிறுமி பாலியல் வன்புணர்வு; சிறிய தந்தை சிக்கினார்

■ சுமனசிறி குணதிலக்க

வெல்லவாய - தனமல்வில,பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவுலே ஆர பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் சித்தப்பா திங்கட்கிழமை (07) அன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள முறைப்பாடு பெட்டியில் வைக்கப்பட்டிருந்த கடிதமொன்றை, வகுப்பு ஆசிரியரொருவர் வாசித்ததன் மூலம் இது தொடர்பாக தெரியவந்துள்ளதுடன், ஆசிரியர் பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சிறுமி தனது பாட்டியின் வீட்டில் வைத்துப் பல சந்தர்ப்பங்களில் சந்தேக நபரான 24 வயதுடைய திருமணமான இளைஞனால் கடுமையாக பாலியல் வன்கொடுமைக்குள்ளாகியமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதுடன், சிறுமி வைத்திய பரிசோதனைக்காக தனமல்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வைத்தியர் மஹேசியின் விளக்கமறியல் நீடிப்பு

அரசாங்க சுற்றறிக்கைகளை மீறி நோயாளிகளுக்கு நஷ்டம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் மஹேசி சூரசிங்க விஜேரத்னவை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க செவ்வாய்க்கிழமை (08) உத்தரவிட்டுள்ளார்.

ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் தலா 2 மில்லியன் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## புதையல் தோண்டிய ஐந்து பேர் கைது



தெனியாய, மெதெரிபிட்டியவில் உள்ள ஒரு வீடோன்றின் பின்னால் உள்ள நிலத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர், செவ்வாய்க்கிழமை (08) அன்று கைது செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மெதெரிபிட்டிய, கும்புருபிட்டிய மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த 35-45 வயதுக்குட்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

குறித்த வீட்டின் பின்னால் புதையல் தோண்டப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றபோது வீட்டைச்சுற்றி மின் குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் வீட்டின் அருகே சுமார் 4 அடி ஆழத்தில் ஒரு குழி தோண்டப்பட்டு, வீட்டின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் மலர் மற்றும் விளக்குகளை ஏற்றி , பூஜை செய்து கொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த இடத்திலிருந்து குழி தோண்ட பயன்படுத்தும் உபகரணங்கள் எலுமிச்சைப்பழம், மலர், விளக்குகள், பழங்கள், வெற்றிலை, தீப்பந்தங்கள், தேங்காய் எண்ணெய், தெம்பிலிக்காய், பால் பாக்கெட்டுகள் மற்றும் பூஜைகளுக்கு பயன்ப்படுத்தும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

## கிழக்கு ஆளுனர்-பொது மக்கள் சந்திப்பு

■ ஏ.எச்.ஹஸ்பர்



கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்ணசேகரவிடம் முன்வைக்கப்பட்ட பொதுமக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், பொதுமக்கள் தினம் செவ்வாய்க்கிழமை (08) அன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

இங்கு, பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளைப் பொறுப்பான அதிகாரிகளிடம் முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டதுடன் மேலும் ஆளுநரிடமும் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

## சிறுமியை கர்ப்பமாக்கிய போலி பூசாரிக்கு 15 ஆண்டுகள் சிறை

பூசாரியைப் போல வீட்டுக்குள் நுழைந்து, தாயுடன் கள்ளத் தொடர்பை ஏற்படுத்தி அவ்வீட்டிலேயே தங்கியிருந்து 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி, அச் சிறுமியைக் கர்ப்பிணியாக்கிய போலி பூசாரியைக் குற்றவாளியாக இனங்கண்ட பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி சமன் குமார, அந்த குற்றவாளிக்கு 15 வருட கடூழிய சிறைத்தண்டனை, செவ்வாய்க்கிழமை (08) விதித்தார்.

ஹொரணை, ஹிம்புட்டுஹேனவைச் சேர்ந்த கல்லுகே சுரங்க புஷ்பகுமார என்ற 44 வயது நபருக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைத் தண்டனைக்கு கூடுதலாக, பாதிக்கப்பட்டவருக்கு ரூ.500,000 இழப்பீடு வழங்கவும், அந்தத் தொகையை அவர் செலுத்தத் தவறினால், அவருக்கு லேசான வேலைகளுடன் 24 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது.

ஹொரணை, ஹிம்புட்டுஹேன பகுதிக்குப் பூசாரி போல, கடந்த 2021ஆம் ஆண்டு சென்றிருந்த குற்றம் சாட்டப்பட்டவர், அந்த சிறுமியின் தாயுடன் கள்ளத்தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு அந்த வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார். அந்த காலப்பகுதியில் சிறுமியையும் பாலியல் வன்புணர்வுக்கு உற்படுத்தி, கர்ப்பிணியாகியுள்ளார்.

சம்பவத்தையடுத்து, கைது செய்யப்பட்ட போலி பூசாரிக்கு எதிராக ஹொரண நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அடிப்படை விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர், சட்டமா அதிபரினால், களுத்துறை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## ரயிலில் மோதி இளைஞன் பலி

■ ரீ.எல்.ஜவ்பர்கான், வா.கிருஷ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கருவேப்பங்கேணி பகுதியில், வைத்து ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (08) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய சுந்தரராஜா நிசாந்தன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் சம்பவ தினத்தன்று அதிகாலை 1.30 மணியளவில் ரயில் தண்டவாளத்தில் இருந்துள்ளதுடன் மட்டு. ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கி பிரயாணித்த கடுகதி ரயில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பிரேதப் பரிசோதனைக்காக சடலம் மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அறநெறி ஆசிரியர்களுக்கு ரூபா 7,500 கொடுப்பனவு

எந்தவொரு தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும் இன்றி அறநெறிப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களின் சேவையை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதனை ஊக்குவித்தல் மற்றும் அவர்களது தனித்துவ அடையாளத்தை பாதுகாப்பதுடன், சமூகத்தின் நல்லிருப்புக்குத் அத்தியாவசியமான அறநெறிக் கல்வி அபிவிருத்திக்காக அறநெறி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு மற்றும் சீருடைக் கொடுப்பனவை வழங்குதல் மிகவும் பொருத்தமானது என இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2026 தொடக்கம் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க மதங்களுக்குரிய பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் ஒரு ஆண்டு கால தொடர்ச்சியான சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கொடுப்பனவு மற்றும் சீருடைக் கொடுப்பனவு அடங்கலான கொடுப்பனவாக ரூ.7,500 தொகையை ஆண்டுக்கு ஒரு தடவை செலுத்துவதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

### மாநகர சபை, நகரசபை சட்டத்தை

## "தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்"

■ நிதர்ஷன் வினோத்



மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தக் கோரி வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளர் தேவனந்தினி பாபுவிடம் மகஜர் ஒன்று கையளித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினருமான உமாச்சந்திர பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (08) அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், "மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என நாம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறோம். இது தமிழ் பேசும் மக்களுக்கான மொழி உரிமையை உறுதி செய்யும் ஒரு முக்கிய சட்டமாக இருக்கிறது. ஆனால், இன்று வரை அதற்கான தீர்வு கிடைக்காமையால் மீண்டும் இதை வலியுறுத்தி கடிதம் வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கையளித்துள்ளோம்.

1897இல் உருவாக்கப்பட்ட சட்டமானது இன்று வரை திருத்தப்படாத ஒன்றாக இருக்கின்றது. பல வருடங்கள் நடைமுறையில் உள்ள மாநகர சபை சட்டத்தை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட வேண்டும்.

குறிப்பாக இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய சட்டங்களை சமகால தேவைக்கமைய வகுக்கும் போது, மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர சபைக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அவசியம். இதனால் மாநகர சபைகள் மற்றும் நகரசபைகளின் சட்டங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பது, தமிழ் பேசும் மக்களின் சட்ட உரிமைகளை உறுதி செய்வதோடு, அவர்களின் சட்ட விழிப்புணர்வையும் அதிகரிக்கும். இது உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கும், அதில் பங்கேற்பதற்கும் உதவும் என நம்புகின்றேன். எனவே, மாநகர சபை மற்றும் நகரசபை சட்டத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் அவசியமானது மற்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் கூடுதல் வரியை கண்டித்த பிரிக்ஸ் கூட்டமைப்பு

அமெரிக்காவில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள கூடுதல் வரி விதிப்புகளுக்கு பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு தன்னுடைய கவலையைத் தெரித்துள்ளது. எனினும், கூடுதல் வரி விதிக்கும் நாடுகளின் பட்டியலை ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக அறிவித்த சில மணி நேரங்களில், மேலும் 12 நாடுகளின் பட்டியல் வெளியானது. மியன்மார், தென்னாபிரிக்கா, மலேசியா, வங்கதேசம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கும் வரி உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் இலங்கையின் பெயர் இல்லை. எனினும், இலங்கையின் பெயர் உள்ளடக்கப்படுமாயின், இலங்கையின் ஆடைத்தொழிற்றுறை கடுமையாகப் பாதிக்கும் என்றும், பல தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்படும். தொழிற்வாய்ப்பு இல்லாமல் போகும். பிரச்சினைகள் அதிகரிக்கும் என எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டிவருகின்றது.

எனினும், இந்த கூடுதல் வரி விதிப்பு இலங்கைக்கு மட்டுமே விதிக்கப்பட்டது ஒன்றல்ல பல நாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ளன என தெரிவித்துள்ள ஆளும் தரப்பினர், பேச்சுவார்த்தையின் ஊடாக நல்ல தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ளன. எனினும், இன்னும் குறுகிய காலமே இருக்கின்றது என்பதை நினைவில் வைத்துக்கொள்வது அவசியம்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் பெரும் கவலைகளை ஏற்படுத்தி இருப்பதாகவும், பொருளாதார ரீதியில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதாகவும் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. எனினும், இந்த விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பெயர் குறிப்பிடாமல் தவிர்க்கப்பட்டது கவனிக்கத்தக்கது.

பிரிக்ஸ் கூட்டமைப்பு 2009இல் தொடங்கப்பட்டது. இதில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. பிரிக்ஸ் கூட்டமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டிஜெனிரோ நகரில் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பமானது.

ஒரு நாடு, உலகத்தோடு இணையாமல் வாழமுடியாது. ஏனைய நாடுகளுக்கு அமெரிக்க விதிக்கும் கூடுதல் வரியினால், அந்த நாடுகள் எம்மைப்போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மீது வரிகளைக் கூட்டி விதிக்கக் கூடும். இதனால், எமது ஏற்றுமதி, இறக்குமதி துறைகள் பாதிக்கப்படையலாம் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆகையால், நமது நாட்டின் ஆடைத்தொழிற்துறையையும், அதில் தங்கிவாழும் குடும்பத்தினரையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துடையது. அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு தொடர்பில் அமெரிக்காவுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள வழிசமைக்க வேண்டும். இல்லையேல் தொழிலை இழந்து பலரும் நடுத்தெருவில் நிற்கவேண்டிய நிலைமை ஏற்படும். இது ஏனைய துறைகளின் மீதும் கடுமையான தாக்கத்தை செலுத்தும் என்பதையும் நினைவில் கொள்க.

கூடுதல் வரி விதிப்பு தொடர்பில், அமெரிக்காவுடன் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை வெற்றியடையவேண்டும். இல்லையேல் தொழில்களை இழந்து வீதிக்கு இழுத்து வீசப்படுவோர், சாதாரண தொழில்களைத் தேடுவர், அவர்களைக் குறைந்த சம்பளத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டால், ஏனைய தொழிலாளர்களும் பெரும் அசௌளங்கரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.



## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# மாகாண சபைத் தேர்தல்கள் இவ்வருடம் நடைபெறுமா?

எம்.எஸ்.எம்.ஐயூப்

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஆகியவை நடந்துள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை படிப்படியாக மேலோங்கி வருகிறது.

தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, தென் பகுதியில் சில அரசியல்வாதிகளும் இந்தக் கோரிக்கையை விடுத்து வருகின்றனர். எனினும் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகளினதும் தென் பகுதி அரசியல்வாதிகளினதும் கோரிக்கை ஒன்றெனக் கூற முடியாது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு மாகாண சபைகள் உருவாக்கும் போது அவற்றின் அடிப்படை நோக்கம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு அரசில் அதிகாரத்தைப் பரவலாக்குவதாகவே இருந்தது. எனினும், தமிழ் பகுதிகளுக்கு அதிகாரம் பரவலாக்கப்படும்போது, அதற்கு எதிராகத் தென் பகுதி மக்களிடமிருந்து எழக்கூடிய எதிர்ப்பை சமாளிப்பதற்காகவே நாட்டில் ஏனைய பகுதிகளிலும் மாகாண சபைகளை உருவாக்க அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன நடவடிக்கை எடுத்தார்.

எனவே, இப்போது மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு கோரிக்கை விடுக்கும் அரசியல்வாதிகளின் நோக்கங்களிலும் வேறுபாடுகளை எதிர்ப்பார்க்கத் தான் வேண்டும். தென் பகுதி அரசியல்வாதிகளுக்கு மாகாண சபையானது பணம் சம்பாதிப்பதற்கான அதிகாரத்தைப் பெறும் ஒரு வழி மட்டுமேயாகும்.

கடந்த காலத்தில் பாராளுமன்ற அளவில் அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளின் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் இடமாகவே மாகாண சபைகள் கருதப்பட்டன. தற்போதைய நிலையில், அவர்கள் மாகாண சபைத் தேர்தல்களை தம்மை பலப்படுத்திக் கொள்ளும் ஓர் உத்தியாகவே கருதுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் அரசியல்வாதிகள் எவரிடத்திலும் இவ்வாறான நோக்கங்கள் இல்லை என்று கூற முடியாது. ஆயினும், மாகாண சபைகள் விடயத்தில் அவர்களில் பலரிடம் ஓர் அரசியல் நோக்கமும் இருக்கிறது. அதாவது, போதுமானதாக இல்லாவிட்டாலும் மாகாண சபைகளானது ஓரளவுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்ட ஓர் அரசியல் பொறிமுறையாகும். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றதோர் கருத்தும் பலரிடம் இருக்கிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பது 1980களில் ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. குறிப்பாக 1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான கலவரத்தின் பின் இந்தியா தமது உயர் மட்ட அதிகாரிகளான கோபாலசுவாமி பார்த்தசாரதி மற்றும் ரொமேஷ் பண்டாரி போன்றவர்கள் மூலம் இந்த விடயத்தை ஏற்குமாறு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்தது.

இறுதியில் இந்தியா, இலங்கைக்கு தமது படைப் பலத்தையும் காட்டியே இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு இலங்கையை இணங்கச் செய்தது. அந்த வகையில், இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை அரசாங்கங்கள் எதையாவது செய்திருந்தால் அது மாகாண சபைகளை உருவாக்கியமை மட்டுமேயாகும்.

ஆயினும், அது இலங்கை அரசாங்கத்தின் மீது திணிக்கப்பட்டதொன்றேயல்லாமல், இலங்கையின் தலைவர்கள் அதனை விரும்பி செய்ததொன்றல்ல. தம்மில் சிலருக்குப் பயன்படும் என்பதற்காக அவர்கள் மாகாண சபை முறையை அதன் பின்னர் நடத்தி வந்தார்களேயல்லாமல் அதிகார பரவலாக்கல் தொடர்பான தமிழர்களின் கோரிக்கையை மதித்து அவர்கள் அம்முறையை நடத்தி வரவும் இல்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் ஆயுதம் ஏந்தி அரச படைகளுக்கு எதிராகப் போரிட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரண்டு அமைப்புக்களும் மாகாண சபை முறையை எதிர்த்த காரணத்தால் ஐ.தே.க. தலைவர்கள் அக்காலத்தில் உயிர் அச்சுறுத்தல்களையும் சந்தித்தனர். ஆயினும், பின்னர் அக்கட்சியின் தலைவர்களும் தமிழர்களுக்கு மாகாண சபைகளின் அளவிலாவது அதிகாரம் பரவலாக்கப்படுவதை முக்கியமானதாகக் கருதவில்லை.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத தற்போதைய நிலை அதற்குச் சிறந்த உதாரணமாகும். 2017ஆம் ஆண்டு அப்போதைய ஐ.தே.க. அரசாங்கம் எடுத்த நடவடிக்கையொன்றே அத்தேர்தல்களை இது வரை தடுத்து வந்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க எப்போதும் தேர்தல்களைச் சந்திக்கப் பயந்தார். 2015ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆதரவில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன், அவர் பிரதமராக நியமிக்கப்பட்டார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் ஒருவர் மட்டுமே பிரதமராக நியமிக்கப்பட முடியும் ஆயினும் ஐ.தே.கவுக்கு சுமார் 70 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கும் நிலையிலேயே அதன் தலைவரான ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

அன்று ஜனாதிபதரித் தேர்தலை அடுத்து உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தியிருந்தால் ஐ.தே.கவின் பெரும்பான்மை மிகவும் அதிகரித்திருக்கும். ஆனால் ரணில் தாமதித்தே அத்தேர்தலை நடத்தினார். அதேபோல் அவர் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்தவும் தயங்கினார். அதற்காக அவர் தேர்தல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். இந்த தாமதத்தின் காரணமாகவே பதவிக்கு வந்த மூன்றாண்டுகளில் 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்டஉள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க. படுதோல்வியடைந்தது.

மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப் போடும் நோக்கில் அவர் 2017ஆம் ஆண்டு அத்தேர்தல்களுக்கும் கலப்புத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான சட்ட மூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். தனிச் சட்டமாக சமர்ப்பித்தால் அதனை உயர் நீதிமன்றத்தில் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும் என்பதால் அவர் அதனை மற்றொரு தேர்தல் சட்டத் திருத்தம் ஒன்றுடன் இணைத்தே சமர்ப்பிக்கச் செய்தார். அது நிறைவேறியது.

அதன் பின்னர் கலப்பு தேர்தல் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளில் தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதற்காக எல்லை நிர்ணய சபையொன்று நியமிக்கப்பட்டு அறிக்கையும் தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தக் கட்டம் வந்த போது, அவ்வறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அமைச்சராவது (பைசசர் முஸ்தபா) அதற்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

அவ்வாறு அவ்வறிக்கை பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதால் சட்டப்படி பிரதமரின் தலைமையிலான ஒரு குழு இரண்டு மாதங்களுக்குள் திருத்த அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ரணில் விகரமசிங்கவே பிரதமராக இருந்தார். ஆனால், அவர் 2019ஆம் ஆண்டு பிரதமர் பதவியில் இருந்து விலகும் வரை திருத்த அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. எல்லை நிர்ணயம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாது தேர்தலை நடத்தவும் முடியாது.

2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலுக்கும் கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்ட போதே தேர்தலை ஒத்திப் போடவே ரணில் அத்திருத்தத்தைக் கொண்டு வருகிறார் என்று எதிர்க்கட்சிகள் கூறின. அவர் பதவி விலகும் வரை திருத்தப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் அக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது.

இதனையடுத்து, பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்‌ஷவவின் அரசாங்கமோ ரணில் விக்ரசிங்கவின் அரசாங்கமோ இந்தச் சட்டச் சிக்கலைத் தீர்த்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வரவில்லை. இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் ஒன்றில் எல்லை நிர்ணய அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும், அல்லது கலப்பு தேர்தல் முறையை இரத்துச் செய்து முன்னர் போல் விகிதாசார முறைப்படி தேர்தல் நடைபெற வேண்டும். அதற்காக மற்றொரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த நிலையில், பழைய விகிதாசா முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அதாவது ரணிலின் ஆட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

எம்.ஏ.சுமந்திரன் தனி நபர் சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். சிறியதோர் திருத்தத்துடன், அதே ஆண்டு ஜூன் மாதம் உயர் நீதிமன்றமும் அதனை அங்கீகரித்தது. ஆனால், எந்தவொரு பிரதான கட்சியும் அதனை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதைக் கருத்திற்கொள்ளவில்லை. எனவே, தான் இன்று வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாமல் இருக்கிறது. இறுதியாக 2014ஆம் ஆண்டே மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

மாகாண சபைகள் இனப் பிறசிக்கைக்குத் தீர்வாகும் என்று தாம் நம்புவதில்லை என்றாலும் தமிழ் மக்கள் மாகாண சபைகள் தமது உரிமை என்று கருதுவதால் தாம் அச்சபைகளை இரத்துச் செய்வதில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பல முறை கூறியுள்ளனர். விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த டிசெம்பர் மாதம் தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல் ஒன்றின் போது கூறியிருந்தார்.

ஆயினும், ஆறு மாதங்களுக்குள் நாடளாவிய ரீதியில் மூன்று தேர்தல்கள் நடைபெற்று இருப்பதால் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இவ்வருடம் நடைபெறாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ கடந்த ஏப்ரல் மாதம் கூறினார்.

தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் பெற்றதைப் பார்க்கிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் குறைவாக வாக்குளை பெற்றிருக்கும் நிலையில், சிலவேளை அக்கட்சி தற்போது மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப் போடவும் விரும்பலாம்.



## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள். முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கட்டாக்காலி மாடுகளின் இருப்பிடமாக மாறிய மைதானம்

யாழ். வடமராட்சி கிழக்கு பொது மைதானம் கட்டாக்காலி மாடுகளின் வாழ்விடமாக மாறியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உரிய பராமரிப்பு இன்றியும் ஒரு பக்க வேலியற்றுக் காணப்படும் வடமராட்சி கிழக்கு பொது மைதானத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான மாடுகள் படுத்துறங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொது மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலை கடந்த பல வருடங்களாகக் காணப்படுகின்ற போதும், இது குறித்து அருகில் அமைந்துள்ள பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையினருக்கு தெரியப்படுத்திய போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி வீரர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் உடனடியாக பொது மைதானத்தின் வேலிகளைச் சரி செய்து கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து பொது மைதானத்தின் தரத்தைப் பேணுமாறும் பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

– பு.கஜிந்தன்



# பரீட்சையின்போது ஏற்படும் உள நெருக்கீட்டினை சமாளித்தல்

சனா பராஹ் ஹபீப்,
(ஆசிரியர்), உளவளத்துணை மாணவி,NISD (Jaffna)



“உள நெருக்கீடு என்பது ஒரு செயன்முறையாகும்” பரீட்சையின் போது, ஏற்படும் உள நெருக்கீட்டினை தாமாகவே சரிசெய்து கொள்கின்ற தயார்ப்படுத்தலாகும். சில நெருக்கீடுகள் வாழ்க்கையில் பயன்தரக்கூடியதாக அமையும் அதேவேளை, அளவுக்கு அதிகமான உளநெருக்கீடுகள் ஆபத்தானவையாக அமையலாம்.

பரீட்சையொன்றினை வெற்றிகொள்ள பரீட்சார்த்தியொருவர் எவ்வாறு தனக்கு ஏற்படும் உளநெருக்கீட்டினை மட்டுப்படுத்தலாம். பரீட்சையொன்றினை வெற்றிகொள்ள பரீட்சார்த்தியொருவர் எவ்வாறு தனக்கு ஏற்படும் உள நெருக்கீட்டினை மட்டுப்படுத்தலாம்? பரீட்சையொன்றைச் சிறப்பாக வெற்றி கொள்வதற்கு பரீட்சாத்தியொருவர் திறம்படச் செயற்பட்டு சிறந்த அடைவு மட்டத்தை எய்துவதன் ஊடாக சமூகத்தில் புகழையீட்டலாம்.

அளவுக்கதிகமான நெருக்கீடோ அல்லது கணிசமான அளவு நெருக்கீடோ பரீட்சார்த் தியொருவரின் வினைத்திறன், செயற்றிறன் என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே பரீட்சார்த்தியொருவர் நடுநிலையான வராக இருக்க வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும். உங்கள் பரீட்சையைச் சிறப்பாக வெற்றிகொள்வதற்கும், நெருக்கீடுகளை குறைத்துக் கொள்வதற்குமான சில ஆலோசனைகள்,

## நெருக்கீடுகளைச் சமாளிப்பதற்கான உத்திகள்

**உத்தி-01:** உதவி நாடல் பரீட்சைக்குத் தயாராகும்போது, ஆசிரியரிடமோ, அல்லது விரிவுரையாளரிடமோ, பாடங்களை எவ்வாறு மீட்டிக் கொள்ளலாம் என்பது பற்றி கேட்டறிந்து கொள்ளுங்கள்.

**உத்தி-02:** குறுகிய கால ஓய்வெடுத்தல் நீங்கள் பரீட்சைக்குத் தயாராகும்போது, அல்லது மீட்டல் செய்யும்போது, சோர்வடைந்தால் சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். களைப்படையும்போது, மனப்பதிவுகளை ஏற்படுத்த முடியாது. 10 நிமிடம் போதுமானது.

**உத்தி-03:** வேலைத்திட்டம். மீட்டும்போது, நீங்கள் அறிந்த விடயங்களை திறம்பட மீட்டிக் கொள்ளவும்.

**உத்தி- 04:** ஆரோக்கியம் போதியளவு தூக்கம், உணவும் ஆன்மீகப் பயிற்சி தேவையான உடற்பயிற்சியிலும் ஈடுபட்டு உற்சாகமாகச் செயற்பட வேண்டும். குறிக்கோளுடன் தொடர்புபடாத எந்த விடயங்களையும் கவனத்தில் எடுக்காதிருப்பது பயன்தரும்.

**உத்தி - 05:** நீங்கள் உங்கள் எதிர்காலம் பற்றியோ, தோல்விகள் பற்றியோ யோசிக்க வேண்டாம். மேலும், உங்களை வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். இவை சில வேளைகளில் தைரியத்தை இழக்கச் செய்யும்.


**உத்தி - 06:** அனைத்தும் சரியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்க வேண்டாம். உங்களால் முடியுமானவற்றை முதலில் செய்யுங்கள். ஏனெனில், இதனைவிட வேறொருவரால் அதிகமாகச் செய்யக் கூடியதாக இருக்கும். தெரிந்தவற்றை முன்னரும் நினைவிழந் தவற்றைப் பின்னரும் மீட்டுக் கொண்டு விடையளிக்கலாம்.

**உத்தி - 07:** கவனமெடுத்தல் ஏதேனும் நோய்த்தன்மை அல்லது வலி ஏற்பட்டால், உங்களது கவலை பற்றி பிறருடன் பேசுங்கள். ஆறுதல் பெற சாந்தப்பயிற்சியிலீடுபடுங்கள்.

**உத்தி - 08:** ஓய்வு வேண்டாம் நீண்ட நேர ஓய்வு சோம்பலைத்தந்து செயற்பட முடியாமல் மதிப்பெண்ணைக் குறைவடையச் செய்யும். நீண்ட கால ஆயத்தம் நீங்கள் கற்பதற்கு விருப்பமானவற்றையே எப்பொழுதும் தெரிவு செய்து கொள்ளுங்கள் அதற்காக அதிக அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் பொருத்தமான ஓர் துறையைத் தெரிவு செய்தால் அதனை நன்கு திட்டமிடுங்கள். அதனூடாக நிலைத்திருக்கக்கூடிய பாரிய செயற்றிட்டமொன்றினை வகுத்துக் கொள்ளுங்கள். கிரமமாக வகுப்பறைக்குச் சமூகமளித்து ஆர்வத்துடன் செவிமடுங்கள்.முறையாகக் குறிப்புக்களை எழுதிக் கொள்ளுங்கள். ஞாபகப்படுத்துவதைவிட எண்ணக்கருக்களை நன்கு புரிந்து கொள்ளுங்கள். உங்கள் சந்தேகங்களை ஆசிரியர்களிடமோ, நண்பர்களிடமோ கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். கடினமான விடயங்களில் நம்பிக்கையானவர்களிடம் உதவியை நாடுங்கள். உங்களுக்குத் தெரிந்த விடயங்களுடன் புதிய தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்து தொடர்புப்படுத்தித் தீர்வு காண்பதற்கான பொருத்தமான வழிமுறையொன்றைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். எழுதிய குறிப்புக்களை முறையாகவும், ஒழுங்காகவும் பேணுவதனூடாக பயனுறுதி மிக்க மீட்டலுக்கு உத்தரவாதப்படுத்திக் கொள்ளுங்கள். இலகுவான பாடங்களை விட கடினமான பாடங்களில் கூடிய நேரத்தைச் செலவு செய்யுங்கள். போலியான அல்லது பயனற்ற பரீட்சை ஆயத்தங்களில் ஈடுபடாமல்
தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## பரீட்சைக்கு முந்திய வாரம்

பரீட்சைக்கான வினாத்தாளின் கட்டமைப்பினை பரிசீலனை செய்து கொள்ளுங்கள். அது பல்தேர்வு வினாவா? கட்டுரை வகையானவையா? என்பதையும் வழங்கப்படுகின்ற வினாக்களின் எண்ணிக்கை அதற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் என்பவற்றை



கவனத்திற் கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள். நேர அட்டவணையொன்றைத் தயார்ப் படுத்திக்கொள்ளுங்கள்.

அதில் உங்களின் விளையாட்டுக்கும், பொழுது போக்கிற்குமான செயற்பாடுகளுக்கும் நேரத்தை ஒதுக்கிக் கொள்வதோடு சிக்கலான விடயங்களை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கிரகித்தலின் போது ஏற்படும் நினைவுப் பிரள்வுகள், கவனக்கலைப்பான்களை அதாவது இடைஞ்சல்கள் பற்றி ஆசிரியர்,நண்பர் கள், பெற்றோர்கள் நம்பிக்கைக்குரியவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

குறுகிய நேர ஓய்வெடுங்கள். மீட்டலுக்கான நுட்பங்களை ஏனைய விடயங்களுடன் ஒப்பிட்டு பரிசீலனை செய்து மாற்று வழிகளைக் கையாளவும்.

(உ-ம்) கடந்த கால வினாக்கள் குழு முறைக் கற்றல் செயற்பாடுகள் சகபாடிகளுடனான அனுபவப்பகிர்வு. TR அளவுக்கதிகமாக கோப்பி, தேனீர், மென்பானங்கள் போன்றவற்றை நுகராது தவிர்ப்பதோடு, புகைப்பிடித்தல், மது பாவனை என்பவற்றைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளவும். கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள் சம்பந்தமாக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். உ-ம்: கரப்பான், நெருக்கீட்டுடன் கூடிய தலையிடி தேவையற்ற நெருக்கீடுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள் அதற் காக ஏனையவர்களுடனான உறவுகளை துண்டிக்க வேண்டாம்.

பரீட்சைக்கு முன்னைய நாள் பரீட்சைத் திகதி, நேரம், இடம் என்பவற்றைப் பரிசீலனை செய்து ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள். தேவையான உபகரணங்களைப் பரிசீலனை செய்யுங்கள். தயார்ப்படுத்திய மீட்டல் அட்டையைப் பரிசீலித்துக் கொள்ளுங்கள். புதிய உபகரணங்களைத் தேடவோ, புதிய விடயங்களைத் கற்கவோ வேண்டாம்.

* பரீட்சை நிலையம் பற்றி ஒரு கனம் சிந்தியுங்கள். இது உள் ரீதியான ஒத்திகையாக இருத்தல் வேண்டும். தொடர்ந்தும் மீட்டிக் கொள்ளுங்கள். இயற்கை அனர்த்தம் ஏனைய காரணிகளால் பாதிக்கப்பட்டிருப்பின் அதிலிருந்து மீள்வதற்கான வழியையும், உள ஆற்றுப்படுத்துகையும் செய்து கொள்ளுங்கள். “ஆறுதல்” பயிற்சியின் நுட்பங்களைப் பிரயோகித்து தாராளமாக உங்களது தூக்கத்தை உத்தரவாதப்படுத்திக் கொள்ளுங்கள். இதன்மூலம் நமது உள்ளம் தெளிவானதாக மாறுகிறது. அஜீரணத்தை ஏற்படுத்தக்கூடிய உணவுகளை உட்கொள்ளாது பார்த்துக் கொள்ளவும்.

## முடியுமான அளவு அன்றாட நடவடிக்கைகளை சாதரணமாகவே செய்து கொள்ளுங்கள்.

* உங்களால் செறிவான உணவை உட்கொள்ள முடியாத நிலையில் குளுக்கோஸ், இனிப்புப் பண்டங்கள் என்பவற்றை உண்ணுவதன் மூலம் மூளையின் செயற்பாடுகளை இலகு வாக்கிக் கொள்ளுங்கள். தளர்வு பயிற்சியில் காணப்படும் நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தன்னம்பிக்கை உடையவராயின் தயார்ப்படுத்திய மீட்டல் அட்டையை ஒருமுறை திருப்பிப் பார்த்து கற்றவற்றை மீள் ஞாபகம் செய்து கொள்ளுங்கள். பரீட்சை நிலையத்தைச் சென்றடையும் விதம், நேரம் என்பவற்றைத் திட்டமிடுங்கள். இயலுமாயின் கடிகாரம் ஒன்றைப் பயன்படுத்துவது உதவியாக இருக்கும்.

* பரீட்சைக்கு முன்னைய நாளே அவசியமான பொருட்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

## SH பரீட்சையின் போது...

* வினாப்பத்திரத்தை ஒரு தடவை முழுமையாக வாசித்துக் கொள்ளுங்கள். உங்களது நேரத்தை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். வினாக்களை முன்னுரிமைப்படுத்தி, ஒழுங்குபடுத்துவதோடு, அதற்கான விடைகளைத் திட்டமிட்டு, அவ்விடைகள் வினாவுடன் தொடர்புடையனவா? என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ளுங்கள்.

* விடை எழுதும்போது, தடைப்ப வதன் மூலம் ஏற்படும் நேர விரயத்தைத் தவிர்த்து அதே நிலையில், ஏனைய வினாவுக்கு உங்களது கவனத்தைத் திருப்பலாம். சரியான எண்ணிக்கையில் வினாவுக்கான விடையை எழுதவும். கூடுதல் மதிப்பெண்கள் பெறக்கூடியவற்றை முதனிலைப்படுத்தவும்.

* விடையெழுதிய பின்னர் நேர மிருப்பின் விடைப் பத்திரத்தை மீண்டும் ஒரு தடவை வாசித்துக் கொள்ளவும்.

* மனநிலை, எண்ணம் சார்ந்ததாக இருக்கும்போது அதற்கு நோவினை ஏற்படாது பார்த்துக் கொள்ளவும். பரீட்சையின் போது உங்களுக்கு வலி ஏற்பட்டால் குறிப்பிட்ட சில நேரத்தை மாத்திரம் ‘தளர்வு’ பயிற்சிக்கு இடமளிக்கவும். கைகளை இலகுபடுத்தி ஆழமாக சுவாசிக்கவும். தளர்வுப் பயிற்சிக்கான சில நுட்பங்கள்

* வேலையை நிறுத்திக் கொள்ளுங்கள், ஆழமாக சுவாசியுங்கள்.

* மெதுவாக மூச்சை வெளியிட்டு உங்கள் தோள்பட்டை முழங்கை, கைகள் என்பவற்றைத் தளர்த்திக் கொள்ளுங்கள். பின்னர் சாந்தப்படுத்தி கொள்ளுங்கள் மீண்டும் சுவாசியுங்கள் மெதுமெதுவாக தலையையும் தாடையையும் தளர்த்திக் கொள்ளுங்கள்.

* சில நொடிகள் மாத்திரம் அமைதியாக இருங்கள். இப்போது நீங்கள் வேலையைத் தொடங்கலாம்.

பரீட்சை முடிந்த பின்னர் காத்திரமாகவும், நேர்த்தியாகவும் இருங்கள். உங்களைப்பற்றி நீங்களே விமர்சித்துக் கொள்வதில் நேரத்தைச் செலவிடவோ, எழுதிய விடயங்கள் சம்பந்தமாக பரிசீலனை செய்வதையோ, தவிர்த்துக் கொள்ளுங்கள். அடுத்தபடிநிலை பற்றி திட்டத்தை வகுத்துக் கொள்ளுங்கள். பொருத்தமான தெரிவினை முன்னுரிமைப்படுத்துங்கள். தொடராக முயற்சியெடுங்கள். இலக்கினை நோக்கிச் செயற்படுங்கள். வெற்றி நிச்சயம். வாழ்க! வளர்க!

“பொருட்களைக் களஞ்சியப்படுத்துங்கள், தற்போது பரீட்சை என்பது உங்களுக்குத் தொந்தரவாக இருக்கலாம். ஆனால் அது உங்களின் எதிர்கால வாழ்க்கை முழுவதிலும் ஒரு சிறு பகுதியாக மாத்திரமே இருந்திருக்கும்.”





# கௌரவிப்பு விழா...

கொழும்பு உயர் மறை மாவட்ட ஆயர், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவப் பணிவாழ்வின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பேராயர் இல்லத்தில் திங்கட்கிழமை(07) அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கௌரவிப்பு விழாவில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கலந்துகொண்டார்.













> Femsஇன் மாதவிடாய் சுகாதார கல்வி முயற்சிகளின் விரிவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது

> மாதவிடாய் சுகாதாரக் கல்வி அமர்வுகளை நடத்தி 300,000இற்கும் மேற்பட்ட பெண்களைச் சென்றடைந்துள்ளது

# மாதவிடாய் பற்றி பேசுவோம்



ஜெயகாந்த் ஜானு

இலங்கையின் முன்னணி பெண்கள் சுகாதார தூய்மை வர்த்தக நாமங்களில் ஒன்றான Fems, ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியதாக 180 பாடசாலைகளில் 180,000இற்கும் மேற்பட்ட மாணவர்களைச் சென்றடையும் வகையில் 'நாம் பேசலாம்', எனும் விரிவான மாதவிடாய் சுகாதாரம் மற்றும் தூய்மை தொடர்பான கல்வித் திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் United Communities ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகளின் ஆதரவுடனும் இந்த முயற்சி அமுல்படுத்தப்படுகிறது.

Fems மற்றும் அதன் பங்காளர்களான இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் United Communities இடையேயான அதிகாரப்பூர்வ புரிந்துணர்வு ஒப்பந்தம் 2025 ஜூலை 08 அன்று கைச்சாத்திடப்பட்டது.

அன்பும் ஆதரவும் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் அங்கீகரிக்கப்பட்ட அரசு சார்பற்ற அமைப்பான United Communities Guarantee Ltd மற்றும் மனித கஷ்டங்களை குறைக்கவும் அவர்களை வலுவூட்டி கண்ணியத்தை வளர்ப்பதற்கும் உறுதிபூண்ட மனிதாபிமான அமைப்பான இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடனான இந்த புதிய இணைவு, Femsஇன் மாதவிடாய் சுகாதார கல்வி முயற்சிகளின் விரிவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நாடு தழுவிய திட்டத்தை ஆதரிப்பதற்காக சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சுடன் தொடர்புகளை எளிதாக்குவதில் இந்த அமைப்புகள் முக்கிய பங்கு வகித்துள்ளன.

இலங்கையில் மாதவிடாய் சுகாதாரக் கல்வி தொடர்ந்து குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறது.நாட்டில் மாதவிடாய் உள்ள 4.2 மில்லியன் பெண்களில், 30% ஆனோர் மட்டுமே தொடர்ந்து மாதவிடாய் தூய்மை அணையாடைகளைப் பயன்படுத்துகின்றனர். பாடசாலைகளில் மாதவிடாய் சுகாதார முகாமைத்துவம் குறித்து WaterAid மற்றும் தெற்காசியாவிற்கான யுனிசெஃப் பிராந்திய அலுவலகம் நடத்திய ஆய்வின்படி, இலங்கையில் 60% பெற்றோர்கள் தங்கள் மகள்களை மாதவிடாய் காலத்தில் பாடசாலைக்கு செல்ல அனுமதிப்பதில்லை.

2021 முதல் Fems, பாடசாலைகள், பெருந்தோட்டங்கள், சிறைச்சாலைகள் மற்றும் பணியிடங்களில் மாதவிடாய் சுகாதாரக் கல்வி அமர்வுகளை நடத்தி 300,000இற்கும் மேற்பட்ட பெண்களைச் சென்றடைந்துள்ளது. இவ் அமர்வுகள் மாதவிடாய் கல்வியில் உள்ள முக்கியமான இடைவெளிகளை நிவர்த்தி செய்தல், சரியான சுகாதார நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் பாடசாலைக்கு வராமல் இருத்தலைக் குறைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தின.

Femsஇன் விரிவாக்கப்பட்ட மாதவிடாய் சுகாதார கல்வி முயற்சியில் இந்தப் புதிய கூட்டணி, முக்கிய பங்காளராகச் செயற்படும். Hemas Consumer Brandsஇன் முகாமைத்துவப் பணிப்பாளரான சப்ரினா ஏசுபலி கருத்து தெரிவிக்கையில், "இலங்கையில் விரிவான மாதவிடாய் சுகாதாரக் கல்வி மற்றும் அது தொடர்பான ஆதரவுக்கான அவசரத் தேவை இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்கு,தவறான சமூக அபிப்பிராயங்களை தகர்த்து அறிவு மற்றும் வளங்களை வழங்குவதில் Femsஇன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இந்த கூட்டாண்மை வலுப்படுத்துகிறது. இளம் பெண்கள் தங்கள் மாதவிடாய் சுகாதாரத்தை நம்பிக்கையுடனும் கண்ணியத்துடனும் பொறுப்பேற்க உதவும் நீடித்த மாற்றத்தை உருவாக்க நாங்கள் எண்ணியுள்ளோம். இந்த முயற்சி, ஒவ்வொரு இலங்கைப் பெண்ணும் சுதந்திரமாகச் சவால்களைத் தாண்டி உயர உதவுவதற்கான எங்கள் நோக்கத்தின் உண்மையான பிரதிபலிப்பாகும்." என்றார்.

'நாம் பேசலாம்' திட்டம், மாணவர்களை இலக்காகக் கொண்ட அமர்வுகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் கல்வி தொடர்பான பொருட்கள் மற்றும் redeemable வவுச்சர்கள் வழங்கப்படும். மேலதிகமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் இலவச மாதவிடாய் தூய்மை அணையாடை பொதிகள் மூலம் பயனடைவார்கள். WaterAid மற்றும் யுனிசெஃப் ஆய்வின்படி,
தற்போது 37% பெண்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சனையாக, அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒன்று முதல் இரண்டு நாட்கள் பாடசாலைக்குச் செல்லத் தவறுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மாதவிடாய் காரணமாக இழக்கப்படும் பாடசாலை நாட்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அனுபவம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிபுணர்களால் நடத்தப்படும் இந்த அமர்வுகள், மாணவர்கள் தங்கள் உடல்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், துல்லியமான, வயதுக்கு ஏற்ற தகவல்களைப் பெறவும், தகவலறிந்து முடிவுகளை எடுக்கவும், இளம் பெண்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட நல்வாழ்வையும் நீண்டகாலமாகப் பாதித்து வரும் முக்கியமான அறிவு இடைவெளிகளை நிவர்த்தி செய்யவும் உதவும். மாதவிடாய் மற்றும் பெண்களின் ஆரோக்கியம் போன்ற விடயங்கள் தொடர்பாக சுகாதார பராமரிப்பு நிபுணர்களிடம் கேள்விகள் கேட்கவும், விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இதனால் அவர்களின் சந்தேகங்கள் பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலில் தீர்க்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

இந்தத் திட்டம், இன்றைய இளைஞர்களிடையே புரிதலை வளர்ப்பதுடன் மாதவிடாய் ஆரோக்கியத்தைச் சுயாதீனமாக நிர்வகிக்கக்கூடிய இலங்கைப் பெண்களின் தலைமுறையை வளர்க்கவும் உதவும் என்று Fems நம்புகிறது. பெண்கள் உச்ச சுதந்திரத்தை அடையவும் சமூகத் தடைகளைத் தாண்டவும் உதவுவது என்ற Femsஇன் முக்கிய நோக்கத்துடன் இந்த திட்டம் ஒத்துப்போகிறது.

## Fems பற்றி...

பெண்கள் மாதவிடாய் சுகாதார நெப்பின்களை வர்த்தக நாமமாக 2004 ஆம் ஆண்டில் Fems ஆரம்பிக்கப்பட்டது. பெண்களுக்கு சுதந்திரமாகவும், சமூக மட்டத்தில் காணப்படும் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு வெளியில் வருவதற்கும் கைகொடுப்பதை இலக்காகக் கொண்டு செயலாற்றுகின்றது. சிக்கனமான, உயர் தரம் வாய்ந்த சுகாதார நெப்பின்களை சகல நிலைகளையும் சேர்ந்த பெண்களுக்கு இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியை வழங்குவதற்கு Fems தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அதற்காக தனது தயாரிப்பு தெரிவுகளில் Aya தயாரிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது. தரத்தில் கவனம் செலுத்துவதுடன், சிக்கனமான தயாரிப்புகளை நாடும் நுகர்வோருக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆழமான புரிந்துணர்வு மற்றும் கரிசனையுடன், அதிகரித்துச் செல்லும் பெண்களுக்கான மாதவிடாய் தூய்மை தேவைகளை நிவர்த்தி செய்வதில் Fems கவனம் செலுத்தி, அவர்களுக்கு சௌகரியமாகவும், நம்பிக்கையுடனும், ஆதரவுடனும் திகழ்வதை உறுதி செய்ய பங்களிப்பு வழங்குகின்றது. இன்று, Fems பெண்களுக்கான மாதவிடாய் கால பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் நம்பகமான வர்த்தக நாமமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. மாதவிடாய் சுகாதாரம் மற்றும் தூய்மை தொடர்பில் பெண்களுக்கு விழிப்புணர்வூட்டுவதை தனது வர்த்தக நாம நோக்காகக் கொண்டு, மாதவிடாய் தொடர்பில் நிலவும் மூட நம்பிக்கைகளை இல்லாமல் செய்வதிலும் கவனம் செலுத்துகின்றது. பெண்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு, அவர்களின் பயணத்துக்கு ஆதரவளித்து, அவர்களின் வலிமையை கொண்டாடும் நாமமாகவும், வலுவூட்டலின் அடையாளமாகவும் Fems திகழ்கின்றது.

> தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் இலவச மாதவிடாய் தூய்மை அணையாடை பொதிகள் மூலம் பயனடைவார்கள்

> Fems தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அதற்காக தனது தயாரிப்பு தெரிவுகளில் Aya தயாரிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது

வொஷிங்டன்

# 14 நாடுகள் மீது வரி விதிப்பு பட்டியலை வெளியிட்ட ட்ரம்ப்

ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீத விதிக்கப்படுவதாக அறிவித்த சில மணி நேரங்களில், மேலும் 12 நாடுகளுக்கு வரிகளை உயர்த்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் பட்டியலிட்டுள்ளார்.



மியன்மார், தென்னாப்பிரிக்கா, மலேசியா, பங்களாதேஷ், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு வரிகளை அவர் உயர்த்தியுள்ளார்.

அந்த நாடுகளுக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பட்டியல்:

தென் கொரியா - 25% வரி, ஜப்பான் - 25% வரி, மியான்மர் - 40% வரி, லாவோஸ் - 40% வரி, தென்னாப்பிரிக்கா - 30% வரி, கஜகஸ்தான் - 25% வரி, மலேசியா - 25% வரி, துனீசியா - 25% வரி, இந்தோனேசியா - 32% வரி, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா - 30% வரி, வங்கதேசம் - 35% வரி, செர்பியா - 35% வரி, கம்போடியா - 36% வரி, தாய்லாந்து - 36% வரி

மேலும் "அமெரிக்காவுக்கு எதிரான இந்த நீடித்த வர்த்தக பற்றாக்குறைக்கு காரணமான பல ஆண்டுகால வரி மற்றும் வரி அல்லாத கொள்கைகள் மற்றும் வர்த்தக தடைகளை சரிசெய்ய இந்த வரிவிதிப்பு அவசியம் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். இந்த பற்றாக்குறை எங்கள் பொருளாதாரத்துக்கும், எங்கள் தேசிய பாதுகாப்புக்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாகும்" என்று இந்த நாடுகளுக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் கூட அமெரிக்க ஜனாதிபதியிடமிருந்து வரி தொடர்பான கடிதம் கிடைக்கப் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அரசு மற்றும் வொஷிங்டன் இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்துக்கான விரிவான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சீனா

## உணவு டெலிவரி ஊழியரான பல்கலைக்கழக பட்டதாரி



முன்னணி பல்கலைக்கழகங்கள் உட்பட பல பட்டங்களைப் பெற்ற சீனாவைச் சேர்ந்த டிங், பிரிட்டனின் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பல்லுயிர் பெருக்கத்தில் முதுகலைப் பட்டம், Peking பல்கலைக்கழகத்தில் ஆற்றல் பொறியியலில் முதுகலைப் பட்டம் மற்றும் சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் உயிரியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

இவ்வளவு தகுதிகள் இருந்தும், டிங்கிற்கு பொருத்தமான வேலை கிடைக்கவில்லை. அவர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்பு ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றினார். மார்ச் மாதத்தில் அவரது ஒப்பந்தம் காலாவதியானதால், புதிய வேலை எதுவும் கிடைக்காததால், அவர் சிங்கப்பூரில் உணவு டெலிவரி ஊழியர் வேலை செய்கின்றார்.

தென் அமெரிக்கா

## முதல் பெண் ஜனாதிபதியாக ஜெனிபர் தேர்வு

தென் அமெரிக்காவில் ஜனாதிபதியாக உள்ள சான் சந்தோகியின் பதவிக்காலம் முடிந்த நிலையில், அங்கு புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆளுங்கட்சி சார்பில் 71 வயதான பெண் டாக்டரான ஜெனிபர் கிர்லிங்க்ஸ்-சிமோன்ஸ் போட்டியிட்டுள்ளார். தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார்.

இதனால் அந்த நாட்டின் முதல் பெண் அதிபராக ஜெனிபர் தேர்வாகி உள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி



பதவியேற்பு விழாவில் ஜெனிபர் பதவியேற்க உள்ளார்.

ஆந்திரா

## கொசு ஒழிப்பில் AI



கொசு ஒழிப்பு நடவடிக்கையில் AI செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையிலான ஆந்திர அரசு திட்டமிட்டுள்ளது.

கொசு உற்பத்தி அதிகம் உள்ள பகுதிகளை கண்காணிக்கவும், அதன் இனங்களை கண்டறியவும், சரியான நேரத்தில் பூச்சிக்கொல்லி தெளிப்பை செயல்படுத்தவும், கொசு கண்காணிப்பு அமைப்பு கட்டுப்பாட்டு ஸ்மார்ட் திட்டத்தை சோதனை முறையில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கை, சென்சார்கள், ட்ரோன்கள் ஆகியவற்றை பயன்படுத்தி கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள முடியும்.

இணைய வழி இணைக்கப்பட்ட சென்சார்கள் வாயிலாக, கொசு அதிகள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படும்.

விசாகப்பட்டினம், விஜயவாடா, காக்கிநாடா, ராஜமஹேந்திரவரம், நெல்லூார், கர்னூல் ஆகிய ஆறு நகராட்சிகளில் உள்ள 66 பகுதிகளில் பரீட்சார்த்த முறையில் இந்த திட்டம் மேற்கொள்ளப்படஉள்ளது.

டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா போன்ற நோய் பரவல் மற்றும் இதனால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குறித்த தகவல்கள் மருத்துவமனை வாயிலாக பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட இடங்களில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

பூர்ணியா

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேரை கொன்று தீயில் எரித்த கிராமத்தினர்

மாந்திரீகம் செய்வதாக கூறி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் பீகாரில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.



பீகார் மாநிலம் பூரணியா மாவட்டம் தெட்கமா எனும் கிராமத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து மாந்திரீக பயிற்சியில் ஈடுபடுவதாக அந்த பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். இதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சம்பந்தப்பட்ட வீட்டாரின் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதுடன், வீட்டிலிருந்தவர்களை தீவைத்து எரித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 16 வயது சிறுவன் ஊர்மக்களிடம் இருந்து தப்பித்து பொலிஸாரிடம் தங்கள் குடும்பம் தாக்கப்பட்டது குறித்து புகார் அளித்துள்ளான்.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் எரிந்த நிலையில் கிடந்த ஐந்து உடல்களையும் மீட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், முக்கிய நபராகக் கருதப்படும் ஒருவரை தீவிரமாக தேடிவருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் நடத்திய விசாரணையில் அதே கிராமத்தில் அண்மையில் குழந்தை ஒன்று உயிரிழந்த நிலையில், அந்த குழந்தையின் உயிரிழப்புக்கு இந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் செய்த மாந்திரீகம் தான் காரணம் என ஊர் முழுக்க பேச்சு எழுந்தது.

இதனால் ஆத்திரமடைந்த அந்த பகுதி மக்கள் மாந்திரீக பயிற்சியில் ஈடுபடுவதாகக் கூறி குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்தி ஐந்து பேரை எரித்து கொலை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

# பங்களாதேஷுக்கு எதிரான இலங்கை குழாமில் ஷானக

பங்களாதேஷுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக மற்றும் பந்துவீச்சு சகலதுறைவீரர் சாமிக கருணாரத்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



இதேவேளை முதன்முறையாக இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிக் குழாமில் எஷான் மலிங்கவும் இடம்பெற்றுள்ளதுடன், டுனித் வெல்லலாகேயும் குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.

இலங்கை இறுதியாக விளையாடிய நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில் இடம்பெற்றிருந்த பானுக ராஜபக்ஷ, சமிந்து விக்ரமசிங்க, அசித பெர்ணாண்டோ ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, அவிஷ்க பெர்ணாண்டோ, கமிந்து மெண்டிஸ், தினேஷ் சந்திமால், தசுன் ஷானக, டுனித் வெல்லலாகே, சாமிக கருணாரத்ன, வனிது ஹசரங்க, மகேஷ் தீக்ஷன, ஜெஃப்ரி வன்டர்சே, மதீஷ பத்திரண, நுவான் துஷார, பினுர பெர்ணாண்டொ, எஷான் மலிங்க.

## சென். மைக்கல்ஸை வீழ்த்திய காத்தான்குடி மத்தி



ரீ.எல்.ஜவ்பர்கான்

இலங்கை பாடசாலை கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(06) அன்று நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான கடி பந்து கிரிக்கெட் போட்டியில் மட்டக்களப்பு சென். மைக்கல்ஸ் கல்லூரியை காத்தான்குடி மத்திய கல்லூரி வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். மைக்கல்ஸ், தமது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், எம்.ஐ.இஸ்ராத் ஹுசைன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய காத்தான்குடி மத்தி 35 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்களை எடுத்த நிலையில், தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், எம்.ஐ. இஸ்ராத் ஹுசைன் 63 ஓட்டங்களும், ஜே.ஏ.சைத் அலி ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் 123 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மைக்கல்ஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் ஆறு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், எம்.இசட்.முஸ்அப் அஹமட் 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், எம்.எஃப்.எம். யூசுப், எம்.ஐ.யாசிர் ஹசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் 2004 உயர்தர வகுப்பு பழைய மாணவர்களின் பூரண அனுசரணையில் உடற்கல்வி ஆசிரியர் எம்.எஃப்.எம்.நஸ்பரால் இந்த கடின பந்து அணி நிர்வகிக்கப்படுகின்றது.

இவ்வணியின் பயிற்றுவிப்பாளர்களாக எம்.எம்.எம்.பாஹிம் மற்றும் எம்.ஏ.எம்.நிஜாம் மற்றும் எம்.அப்துல் ரஹ்மான் ஆகியோர் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சம்பியனானது கல்முனை பிறில்லியன்ஸ்

ஏ.எல்.எம்.ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தின் ஏ தர கழகங்களுக்கிடையில் மாவட்ட கால்பந்தாட்ட லீக் நடாத்திய கால்பந்தாட்டத் தொடரில் கல்முனை பிறில்லியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.



கல்முனை ஐக்கிய சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(06) அன்று நடைபெற்ற 12 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றே பிறில்லியன்ஸ் சம்பியனானது.

சம்பியனான பிறில்லியன்ஸுக்கு 30,000 ரூபாய் பணப்பரிசு, வெற்றிக்கிண்ணம் என்பன அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இரண்டாமிடத்தைப் பெற்ற சனிமௌன்ட்டுக்கு 20,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றி கிண்ணமும் வழங்கப்பட்டது. மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மருதமுனை கோல்ட்மைன்ட் விளையாட்டு கழகத்துக்கு 10,000 ரூபாய் பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டது.

## சிம்பாப்பேவுக்கு எதிராக 367 ஓட்டங்களைப் பெற்ற முல்டர்



சிம்பாப்வேக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் ஆட்டமிழக்காமல் 367 ஓட்டங்களை தென்னாபிரிக்காவின் பதிலணித்தலைவர் வியான் முல்டர் பெற்றுள்ளார். டெஸ்ட்களில் பெறப்பட்ட ஐந்தாவது அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும்.

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், புலவாயோவில் ஞாயிற்றுக்கிழமை (06) ஆரம்பித்த இப்போட்டியின் இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 465 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த தென்னாபிரிக்கா, 5 விக்கெட்டுகளை இழந்து 626 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸ்ஸை இடைநிறுத்தியது. கைல் வெரைன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை குன்டாய் மடிஜிமு பெற்றிருந்தார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, கோடி யூசுஃப் (2), கொர்பின் பொஷ், முல்டர் (2), செனுரன் முத்துசாமி, பிரெனெலன் சுப்ரயனிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 170 ஓட்டங்களையே பெற்றது. ஷோன் வில்லியம்ஸ் ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் பொலோ ஒன் முறையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் சிம்பாப்வே, இரண்டாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 51 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் தகுட்ஸ்வனஷே கைட்டானோ 34 ஓட்டங்களுடன், நிக் வெல்ஷ் ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை பொஷ் கைப்பற்றினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 09, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.